**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.51
https://ngmtamil.in/

# கொங்கு மண்டலத்தின் பண்பாட்டுக் கூறுகள்

**சி. பிரபாகர்,**

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

அலைபேசி எண் ***9788259758, prabhuvps083@gmail.com***.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியாகக் கொங்கு மண்டலம் திகழ்கிறது. “கொங்கு மண்டலத்தின் பண்பாடு அதன் மொழி, வழிபாட்டு மரபுகள், நாட்டுப்புறக் கலைகள், திருவிழாக்கள் மற்றும் சமூக வாழ்க்கைக் கூறுகளின் ஒருங்கிணைப்பாக விளங்குகிறது.”[1] கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இப்பகுதி மக்கள் தனித்துவமான வரலாறு மற்றும் பண்பாட்டு மரபுகளைத் தற்காலத்திலும் பின்பற்றி வருகின்றனர். வேளாண்மை, தனித்துவமான பேச்சுவழக்கு, கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை, பாரம்பரியச் சடங்குகள், விருந்தோம்பல் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியவை இப்பகுதியின் முக்கியப் பண்பாட்டுக் கூறுகளாகும். “நாட்டுப்புற இயல் என்பது மக்களின் வாழ்வியல், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், கலைகள் மற்றும் மரபுகளின் தொகுப்பாகும்.”[2] கொங்கு நாட்டுப்புறக் கலைகள் மக்களின் வாழ்வியலோடு இணைந்துள்ள முக்கியப் பண்பாட்டுச் செல்வமாகும். கொங்கு வட்டாரத்தின் பேச்சுவழக்கு தனித்துவமான பண்பாட்டுக் கூறாகும். இவ்வழக்கு கொங்கு மக்களின் அடையாளத்தையும் மரியாதைப் பண்பையும் வெளிப்படுத்துகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை பின்பற்றப்படும் சடங்குகள் மற்றும் மரபுகள் தொடர்ந்து அடுத்தடுத்த தலைமுறைகளைச் சென்றடைகிறது. இப்பண்பாட்டுக் கூறுகளை ஆய்வு செய்வதன் மூலம் கொங்கு மண்டலத்து மக்களின் பாரம்பரியத் தொடர்ச்சியை ஆழமாகப் புரிந்துகொள்ளலாம்.

## நில அமைப்பு

“தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளின் நில அமைப்பு, அப்பகுதி மக்களின் வாழ்க்கை முறை, தொழில் மற்றும் பண்பாட்டு வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.”[3] கொங்கு

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மண்டலமானது மலைகள், ஆறுகள் மற்றும் பசுமை நிறைந்த வளமான வயல்வெளிகளால் சூழப்பட்டுள்ளது. நீலகிரி மலை, வெள்ளியங்கிரி மலை உள்ளிட்ட “மேற்குத் தொடர்ச்சி மலைகளால் சூழப்பட்ட கொங்கு மண்டலம், வளமான சமவெளிகள், ஆறுகள் மற்றும் கணவாய்களைக் கொண்ட தனித்துவமான நில அமைப்பைப் பெற்றுள்ளது.”[4] காவிரி, பவானி, நொய்யல் மற்றும் அமராவதி போன்ற ஆறுகளைக் கொண்டுள்ள இப்பகுதியானது விவசாயத்தையே முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளது. “ஈரோடு மாவட்டத்தின் நில அமைப்பு காவிரி மற்றும் பவானி ஆறுகளால் வளம்பெற்ற சமவெளிப் பகுதிகளையும், மேடு–பள்ளமான நிலப்பரப்புகளையும் உள்ளடக்கியதாகும்.”[5] தமிழர்களின் நாகரிக வளர்ச்சியில் கொங்கு நாட்டிற்குத் தனித்த இடமுண்டு. நெல், கரும்பு, பருத்தி, மஞ்சள், கம்பு மற்றும் சோளம் பயிரிடுதல் போன்ற இயற்கை விவசாய முறைகள் இன்றும் இப்பகுதிகளில் காணப்படுவதால், கொங்கு நாடு தமிழ்நாட்டின் தானியக் களஞ்சியம் என்று புகழப்படுகிறது.

**வரலாற்றுச் சிறப்பு**

பண்டைய காலத்தில் நிர்வாக வசதிக்காக கொங்கு மண்டலமானது பூந்துறை நாடு, காங்கேய நாடு, பொங்கலூர் நாடு, ஆனைமலை நாடு, வஞ்சூர் நாடு என இருபத்து நான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வரலாற்று ரீதியாக வஞ்சி மாநகரம் என அழைக்கப்படும் தாராபுரமே கொங்கு நாட்டின் தலைநகராகத் திகழ்ந்துள்ளது. கொங்கு மண்டலமானது பழமையான அரசுகளால் ஆட்சி செய்யப்பட்ட ஒரு பகுதியாகும். இதில் சேரர்களின் ஆட்சிக் காலத்தில் தான் இப்பகுதி மிகவும் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்துள்ளது. பல கோயில்கள், கோட்டைகள் மற்றும் கல்வெட்டுகள் இம்மண்டலத்தின் வரலாற்றை எடுத்துரைக்கின்றன. கொங்கு மண்டலத்தில் பல தமிழ் பிராமி கல்வெட்டுகள், குகை ஓவியங்கள், ஈமச்சின்னங்கள் மற்றும் நடுகற்கள் போன்ற தொல்லியல் ஆதாரங்கள் கொங்கு நாட்டின் பழங்கால நாகரிகத்தை வெளிப்படுத்துகிறது. கொடுமணல், தடாகம், பேரூர் போன்ற பகுதிகள் சங்ககாலத் தொழில் மற்றும் வணிக மையங்களாக இருந்துள்ளதைத் தெளிவு படுத்தி, தமிழரின் தொன்மை, வேளாண்மை, தொழில் வளர்ச்சி, கலாச்சாரம் மற்றும் வீர வரலாற்றை எடுத்துக்காட்டும் ஒரு முக்கிய மண்டலமாகத் திகழ்கிறது.

**மொழியும் வட்டார வழக்கும்**

கொங்கு நாட்டு மக்களின் பேச்சு வழக்கானது கொங்குத் தமிழ் என்று அழைக்கப்படுகிறது. இவர்களின் பேச்சில் மரியாதை உணர்வு மிக அதிகமாகக் காணப்படுகிறது. உரையாடல்களில் ஓ மற்றும் ங்க போன்ற விகுதிகள் சேர்த்து மரியாதையுடன் பேசுவர். மென்மையான ஒலியமைப்பு மற்றும் அன்புகலந்த உரையாடல் இப்பகுதியின் அடையாளமாகும். பிறரை அழைக்கும்போது "ஏனுங்க, நீங்க, வாங்க, போங்க, உக்காருங்க, சாப்பிடுங்கோ" எனத் தமிழ் இலக்கணப்படி பன்மைகளைப் பயன்படுத்துவது இவர்களின் இயல்பாகும். "அப்பு, தம்பி, எங்க, உங்க, ஏன்டா,

இருக்கு, போறேன், வாறேன், சொல்றேன் சாப்பிட்டுபோட்டு, தண்ணிவார்த்துக்கிட்டு" போன்ற வார்த்தைகள் இவர்களின் அன்றாடப் பேச்சில் இயல்பாகக் கலந்திருக்கும். மரியாதையாகவும் அதே நேரம் சுருக்கமாகவும் பேசும் பாணி கொங்குத் தமிழின் சிறப்பாகும். குழந்தைகளும் மரியாதையுடன் பேசுவது கொங்கு நாட்டின் தனிச்சிறப்பாகும்.

**உணவு முறையும் விருந்தோம்பலும்**

"கொங்கு மக்களின் விருந்தோம்பல், உழைப்புணர்வு மற்றும் குடும்ப ஒற்றுமை ஆகியவை அப்பகுதியின் தனித்துவமான பண்பாட்டுச் சிறப்புகளாகக் கருதப்படுகின்றன."[6] கொங்கு நாட்டின் உணவு வகைகள் எளிமை மற்றும் ஆரோக்கியத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இப்பகுதி ஆரம்ப காலத்தில் வறண்ட நிலப்பகுதியாகக் காணப்பட்டதால் கம்பு, சோளம், ராகி மற்றும் கேழ்வரகு போன்ற சிறுதானியங்கள் உணவில் முக்கிய இடம்பிடிக்கின்றன. அரிசிப்பருப்பு சாதம், கொள்ளு பருப்பு, கொள்ளு ரசம், கம்பு கூழ், கம்பு தோசை, ராகி களி, அரிசி உணவுகள், மோர்க் குழம்பு, நாட்டுக்கோழி குழம்பு மற்றும் ஒப்பிட்டு என்னும் இனிப்பு ஆகியவை இப்பகுதியின் பாரம்பரிய உணவுகளில் குறிப்பிடத்தக்கவை. மஞ்சள் மற்றும் தேங்காயை அதிகம் பயன்படுத்தப்படுவது இப்பகுதியின் சிறப்பு. இளநீர் மற்றும் பால் சார்ந்த பொருட்களும் இவர்களின் உணவில் அதிகம் இடம்பெறும். மேலும் உணவை வாழை இலையில் பரிமாறும் வழக்கம் இன்றும் கடைபிடிக்கப்படுகிறது. தங்களது இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை முகம் சுளிக்காமல் உபசரிப்பதும், அவர்களது பசியைப் போக்கும் வகையிலான உணவு வகைகளைப் பரிமாறுவதும் முக்கியப் பண்பாடாகும். எனவே தங்களது வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிப்பதில் கொங்கு மக்கள் ஈடு இணையற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

**நம்பிக்கையும் சடங்கு முறைகளும்**

"தமிழகத்தின் பண்பாடு அதன் வரலாறு, மரபுகள், சமய நம்பிக்கைகள் மற்றும் மக்களின் வாழ்வியல் கூறுகளோடு இணைந்து வளர்ந்துள்ளது."[7] கொங்கு நாட்டு மக்களின் வாழ்க்கை முறையில் பிறப்பு முதல் இறப்பு வரை நடக்கும் அனைத்துச் சடங்குகளும் மரபு வழியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. சடங்குகளில் மஞ்சள், குங்குமம், தேங்காய், வெற்றிலை மற்றும் பாக்கு போன்றவை முக்கிய இடம்பெறும். குழந்தை பிறந்தபின் குலதெய்வக் கோயிலில் வைத்து குழந்தைகளுக்குப் பெயர்சூட்டி, மொட்டை அடித்துக் காது குத்தும் விழா கோலாகலமாக நடத்துவர். பெண் குழந்தை பருவமடையும் போது உறவினர்கள் மற்றும் கிராம மக்களை அழைத்து பூப்புனித நன்னீராட்டு விழா நத்துவர். புதிய ஆடை அணிவித்து மஞ்சள் நீராட்டுவர். இந்நிகழ்வில் தாய் மாமனுக்கு முக்கியப் பங்கு உண்டு. திருமணத்திற்கு ஜாதகப் பொருத்தத்துடன், தெய்வத்தின் முன் பூ போட்டுப் பார்ப்பது இன்றும் இவர்களது வழக்கத்தில் உள்ளது. மணமகன் வீட்டார்கள் மணமகள் வீட்டிற்குச் சென்று தாம்பூலம் மாற்றி நிச்சயதார்த்தம் செய்தல், முகூர்த்தக்கால் நடுதல், தாலி

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

கட்டும்போது மங்கல வாழ்த்துப் பாடல் பாடுவது, அம்மி மிதித்தல் மற்றும் நலங்கு வைத்தல் போன்ற மணமக்களை வாழ்த்தும் மரபுகள் இப்பகுதிக்கே உரிய சிறப்பாகும். இவை குடும்ப ஒற்றுமை, சமூகப் பிணைப்பு மற்றும் மரபு வழக்கங்களைப் பாதுகாக்கின்றன.

**வழிபாட்டுத் தலங்கள்**

கொங்கு மண்டலத்தில் பல புகழ்பெற்ற கோவில்கள் அமைந்துள்ளன. அவற்றுள் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், சத்தியமங்கலம் பண்ணாரியம்மன் திருக்கோவில், அவிநாசி லிங்கேஸ்வரர் திருக்கோவில், கொடுமுடி மகுடேஸ்வரர் திருக்கோவில், திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில், பவானி சங்கமேஸ்வரர் திருக்கோவில், சென்னிமலை முருகன் திருக்கோவில், சிவன்மலை முருகன் திருக்கோவில், பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோவில், கோவை கோனியம்மன் திருக்கோவில், பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோவில், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோவில், தென்சேரிமலை முருகன் திருக்கோவில் மற்றும் மருதமலை முருகன் திருக்கோவில் போன்றவை சிறப்புமிக்க கோவில்கள் ஆகும். இக்கோயில்கள் அதன் சமய மரபு, கலைப்பண்பாடு மற்றும் வரலாற்றுப் பெருமையை எடுத்துக்காட்டும் முக்கியப் பண்பாட்டுச் சின்னங்களாகத் திகழ்கின்றன.

**திருவிழாக்களும் வழிபாட்டு முறைகளும்**

“குலதெய்வ வழிபாடு, திருவிழாக்கள் மற்றும் சடங்குகள் கொங்கு மண்டல மக்களின் சமூக மற்றும் சமய வாழ்வில் முக்கிய இடம் வகிக்கின்றன.”[8] கொங்கு மண்டலம் நாட்டுப்புறத் திருவிழாக்களுக்கு பெயர்பெற்றது எனலாம். தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற விழாக்களில் முருகன் கோயில்களில் தேர்த்திருவிழா ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம்பிடித்து இழுப்பர். மாரியம்மன், மாகாளியம்மன் மற்றும் காளியம்மன் போன்ற பெண்தெய்வங்களுக்கும் மதுரைவீரன், கருப்பராயன் மற்றும் அய்யனார் போன்ற காவல் தெய்வங்களுக்கும் வருடந்தோறும் திருவிழாக்கள் வருடந்தோறும் கோலாகலமாக நடத்தப்படுகின்றன. இத்திருவிழாவில் பக்தர்கள் நாக்கு குத்துதல், பால்குடம் எடுத்தல், பூச்சட்டி எடுத்தல், பூமிதித்தல், கரகம் எடுத்தல், காவடி எடுத்தல் முளைப்பாரி எடுத்தல் மற்றும் மாவிளக்கு ஏற்றுதல் போன்ற நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுகின்றனர். ஆடிப்பெருக்கு, கார்த்திகை தீபம் மற்றும் மகா சிவராத்திரி போன்ற திருவிழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பொங்கல் திருநாள் இப்பகுதிகளில் தை மாதத்தில் நான்கு நாட்கள் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. சூரியன் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் மற்றும் பூப்பொங்கல் ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்றன. இது கிராமத்து விவசாய வாழ்க்கையின் அடையாளமாகவும் மக்களின் நன்றியுணர்வையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் திருநாளாகவும் திகழ்கிறது. குலதெய்வ வழிபாடு என்பது கொங்கு பகுதி மக்களின் வாழ்வில் பிரிக்க முடியாத

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

ஒன்றாகும். ஆண்டுதோறும் தங்கள் குலதெய்வக் கோயில்களுக்குச் சென்று கிடா வெட்டிப் பொங்கலிட்டு வழிபடுவதைத் தங்களது பெரும் கடமையாகக் கருதுகின்றனர். கொங்கு பகுதிகளில் திருவிழாக்கள் சமய வழிபாட்டை மட்டுமல்லாமல் வேளாண்மை, சமூக ஒற்றுமை, நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பண்பாட்டு மரபுகளைப் பாதுகாக்கும் பண்பாட்டு அடையாளத்தை இன்றளவும் பின்பற்றி வருகின்றன.

**நாட்டுப்புறக் கலைகள்**

“கலைகள் ஒரு இனத்தின் பண்பாடு, நாகரிகம் மற்றும் வாழ்க்கை முறையை வெளிப்படுத்தும் முக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன.”[9] கொங்கு நாட்டுப்புறக் கலைகள் மக்களின் நாகரிகம், பண்பாடு மற்றும் சமூக மரபுகளின் வெளிப்பாடாகத் திகழ்கின்றன. இக்கலைகள் கிராமியத் திருவிழாக்கள், கோவில் பண்டிகைகள் மற்றும் சமூக நிகழ்ச்சிகளில் நிகழ்த்தப்படுகின்றன. “கும்மி, கோலாட்டம், கரகாட்டம் மற்றும் தெருக்கூத்து போன்ற நாட்டுப்புறக் கலைகள் கொங்கு மண்டல மக்களின் பண்பாட்டு அடையாளங்களாக விளங்குகின்றன.”[10] ஆண்களும் பெண்களும் இணைந்து வரிசையில் நின்று ஆடும் வள்ளிக் கும்மியாட்டமும், வட்டமாக நின்று ஆடும் ஒயிலாட்டமும் கொங்கு வட்டாரத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும். இக்கலைகள் பாடல்களுடனோ அல்லது செண்டை வாத்தியங்களுடனோ ஆடப்படுகின்றன. காவடியாட்டம், கம்பத்தாட்டம், உருமியாட்டம், துடும்பாட்டம், கோலாட்டம் மற்றும் சலங்கையாட்டம் போன்றவைகளும் இப்பகுதியில் புகழ்பெற்றதாகும். பொன்னி வள நாட்டின் இரு சகோதரர்களாகிய பொன்னர் சங்கர் என்ற வீரர்களின் வரலாற்றைக் கூறும் அண்ணன்மார் சுவாமி கதை என்னும் நாட்டுப்புறக் காவியம் இப்பகுதி மக்களின் வீரத்தைப் பறைசாற்றுகிறது. ஊர்த் திருவிழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் அண்ணன்மார் சுவாமி கதையானது நாடகமாகவும் உடுக்கையடிப் பாடல்களாகவும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இக்கலைகள் வெறும் பொழுதுபோக்காக அல்லாமல் கொங்கு பகுதி மக்களின் வாழ்க்கை, தொழில், பக்தி மற்றும் பண்பாட்டு அடையாளங்களைப் பிரதிபலிக்கும் பாரம்பரியச் செல்வங்களாகும். “நாட்டுப்புறக் கதைகள் மக்களின் வாழ்க்கை அனுபவங்கள், உணர்வுகள், நம்பிக்கைகள் மற்றும் பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்தும் வாய்மொழி இலக்கியங்களாகும்.”[11] இக்கலைகள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குப் பரவி இன்று வரை உயிர்ப்புடன் நிலைத்து.

**முடிவுரை**

கொங்கு மண்டலம் தமிழர்களின் தொன்மையான பண்பாட்டு மரபுகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் இன்றளவும் உயிர்ப்புடன் தக்கவைத்துள்ள தனிச்சிறப்புமிக்க பண்பாட்டு நிலப்பரப்பாகும். இப்பகுதி மக்களின் மொழி, வழக்காறுகள், வழிபாட்டு மரபுகள், திருவிழாக்கள், நாட்டுப்புறக் கலைகள், மற்றும் சமூக உறவுமுறைகள், விருந்தோம்பல், நாட்டுப்புறக் கலைகள், சடங்குகள் மற்றும் மரபுவழி நம்பிக்கைகள் ஆகியவை இப்பகுதியின் பண்பாட்டுச் செழுமையையும்

சமூக அடையாளத்தையும் வெளிப்படுத்துகின்றன. இப்பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்துதல், ஆய்வு செய்தல் மற்றும் பாதுகாத்து அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வது காலத்தின் தேவையாகும். இதன் மூலம் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புகளும் வரலாற்றுப் பெருமைகளும் நிலைபெற்று எதிர்காலத்தின் சமூக வளர்ச்சிக்கும் பண்பாட்டு மரபுகளின் பாதுகாப்பிற்கும் வலுவான அடித்தளமாக அமையும்.

**அடிக்குறிப்புகள்**

1. புலவர் குழந்தை, கொங்கு நாடு, சென்னை: சாரதா பதிப்பகம், 2009, பக். 45–52.
2. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2011, பக். 89–97.
3. மா.இராசமாணிக்கனார், தமிழ்நாட்டு வரலாறு, சென்னை: பூம்புகார் பதிப்பகம், 2004, பக். 78–85.
4. புலவர் குழந்தை, கொங்கு நாடு, சென்னை: சாரதா பதிப்பகம், 2009, பக். 45–52.
5. தமிழ்நாடு அரசு, ஈரோடு மாவட்டக் கையேடு, சென்னை: அரசு வெளியீடு, பக். 15–28.
6. அ.மு.பரமசிவானந்தம், தமிழக வரலாறும் பண்பாடும், சென்னை: தமிழ்ப் பதிப்பகம், 2008, பக். 156–165.
7. அ.மு.பரமசிவானந்தம், தமிழக வரலாறும் பண்பாடும், சென்னை: தமிழ்ப் பதிப்பகம், 2008, பக். 156–165.
8. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2011, பக். 89–97.
9. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2007, பக். 112–118.
10. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2007, பக். 112–118.
11. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004, பக். 67–75.

**துணை நூற்பட்டியல்**

[1.] புலவர் குழந்தை. கொங்கு நாடு. சென்னை: சாரதா பதிப்பகம், 2009.

[2.] நா.வானமாமலை. தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.

[3.] சு.சக்திவேல். நாட்டுப்புற இயல் ஆய்வு. சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2011.

**[4.]** மயிலை சீனி வேங்கடசாமி. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2007.

**[5.]** வி. மாணிக்கம், கொங்கு நாட்டு வரலாறு: கி.பி. 1400 வரை, சென்னை: மக்கள் வெளியீடு, 2001.

[6.] மயிலை சீனி. வேங்கடசாமி, பண்டைத் தமிழக வரலாறு: கொங்கு நாடு, பல்லவர், இலங்கை வரலாறு, சென்னை: சோழன் பதிப்பகம், 2024.